**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**
CC.No.84/2022
Prosecution witness.05

| | |
|---|---|
| பெயர் : கௌதம்பாண்டியன் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் :ஜெயசந்திரபாண்டியன் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.03.2026

(3ம் எதிரி ஆஜர், 1, 2, 4, 5ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் கடந்த 17.11.2018ம் தேதி உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் மாலை 05.30 மணியளவில் ராமைய்யாவின் மகன் வினோத்குமார் என்பவர் சிகிச்சைக்காக மேற்படி மருத்துவமனைக்கு வந்தார். நான் அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு வெளிப்புறமாக காயம் எதுவும் இல்லை.

2. அவருக்கு நெற்றி மற்றும் மார்பு பகுதியில் வலி இருப்பதாக கூறினார். நான் அவரிடம் என்ன நடந்தது என்று கேட்டபோது அவர் தனக்கு தெரிந்த 10 நபர்களும், தெரியாத 5 நபர்களும் அன்றைய தினமே மாலை 04.00 மணியளவில் TELC சர்ச் அருகே வைத்து தாக்கியதாக கூறினார். அவரை சோதனை செய்தபோது அவருக்கு நெற்றியில் இரத்தக்கட்டும், இடது மார்பு பகுதியில் கன்றியகாயமும் காணப்பட்டது. நான் அவரிடம் எவ்வாறு அந்த நபர்கள் தாக்கினார்கள் என்று கேட்டபோது அவர் பதில் எதுவும் கூறவில்லை. அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை அளித்து பின்னர்

மருத்துவமனையிலிருந்து அந்த நபர் விடுவிப்பு பெற்றார். அவர் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்று தற்போது எனக்கு நினைவில் இல்லை. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் அசா.1 க்கு வழங்கப்பட்ட காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்தபோதும் முதல்விசாரணையில் கூறிய சங்கதிகளைத்தான் கூறினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டில் மேற்படி நபர் எத்தனை நாட்கள் வரையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்பது பற்றியோ எப்போது மருத்துவமனையிலிருந்து விடுவிப்பு பெற்றார் என்பது பற்றியோ குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு தகவல் அளித்தேன் என்ற விபரம் விபத்து பதிவேட்டில் இல்லை என்றால் சரிதான். அதுகுறித்து தனியாக பதிவேடு உள்ளதால் விபத்துபதிவேட்டில் குறிப்பிடவில்லை. அதனால் எத்தனை மணிக்கு காவல்நிலையத்திற்கு தகவல் அளித்தேன் என்பது என்னால் தற்போது கூறஇயலாது. ஒரு நபர் மெதுவாக நடந்து சென்று கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.